# அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - நோர்வே
# தேசிய மட்டத்திலான அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2023
# திருக்குறள் மனனம் ஒப்பித்தல் போட்டி - ஆண்டு 10

பின்வரும் 10 குறள்களையும் ஒப்பித்தல் வேண்டும். விரும்பிய 2 குறள்களின் பொருள் விளக்கம் கூறுதல்.

1. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. (குறள் 1031)

உலகம் தன்னைத்தானே சுற்றும் போதும் இயற்கையும் செயற்கையுமான கட்டுமானங்கள் சிதையாமல் சுழல்கிறது. இவ் விந்தையைச் செய்கிற உலகம் உழவன் உழுதால் மட்டுமே நிலைத்து நிற்கும் என்பதே பொருளாகும்.

2. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. (குறள் 41)

இல்வாழ்வான் கடமை பரந்தது. இவர்கள் துறந்தோர், ஏழைகள், இறந்தோர் ஆகியோருக்கும் துணை.

3. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (குறள் 45)

இல்வாழ்வின் பண்பும் பயனும் எதுவெனக் கேட்பின், அனைவரிடத்தும் கொண்டிருக்கும் அன்பும் அதன்வழி நின்று அறம் செய்யும் இயல்புமே ஆகும்.

4. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. (குறள் 48)

அறநெறியில் இல்வாழ்க்கை நடத்துவோர், மாறான பிறவழிகளில் சென்று பெறக்கூடிய நற்பயன் எதுவுமில்லை. ஆதலால் ஏனையோரையும் அறவழிகளில் ஒழுகச் செய்தல் வேண்டும். தாமும் அறவழிகளுக்கு அமைய வாழ்தல் வேண்டும். அறநெறிகளுக்கமைய சிறந்த இல்வாழ்வை வாழும்போது பெறக்கூடிய பயன், தவம் செய்து கிடைக்கும் பயனை விட மேலானது.

5. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் 50)

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.

அறம் தவறாது அன்பொழுகக் கூடி வாழும் வாழ்வே இல்லறம் எனச் சிறப்பிக்கப்பட்டது. அதிலும் பிறர் பழிக்காதுவிட்டால் இத்தகைய இல்வாழ்வு பெருஞ்சிறப்பு மிக்கதாக இருக்கும். இல்லறக் கடமைகளையும் பொதுக்கடமைகளையும் அறவழி தவறாது மேற்கொள்வோர் மேலுலகத்தில் உள்ள தெய்வங்களுக்கு இணையானவர்களாகப் போற்றப்படுவர்.

6. இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
   வேளாண்மை செய்தற் பொருட்டு. (குறள் 81)

இல்லத்தில் குடும்பத்தாரோடு கூடிப் பொருளீட்டி மகிழ்வாக வாழ்வதெல்லாம் விருந்தினரை போற்றிச் சிறப்பித்து வாழ்வதற்கே என்கின்றனர்.

7. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
   வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. (குறள் 645)

நாம் சொல்ல விரும்பிய சொல்லை வெல்வதற்கு வேறு சொல் இல்லை என்பதை அறிந்த பின்னரே அச்சொல்லைச் சொல்ல வேண்டும்.

8. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
   அருமை உடைய செயல். (குறள் 975)

செயற்கரிய செயல்களை ஆற்ற வல்லவர்கள் பெருமைக்குரியவர்கள்.

9. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
   புண்ணுடையர் கல்லா தவர். (குறள் 393)

கண்ணுடையவர் என்று சொல்வதற்குரியவர் கற்றவரே. கல்லாதவர் தங்களுடைய முகத்தில் இரண்டு புண்களை உடையவராவர்.

10. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
    நாட வளந்தரு நாடு. (குறள் 739)

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.

தன் நாட்டில் வாழும் மக்களுக்கு வேண்டிய செல்வங்களைத் தன்னகத்தே கொண்ட நாடு வளம் நிறைந்த நாடு. பிற நாடுகளின் உதவியை நாடி நிற்கும் நாடு வளம் நிறைந்த நாடாகாது.

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.